**செய்தி வெளியீடு**

**செய்தி வெளியீடு எண்.67/2023** **நாள் : 30.08.2023**

**<u>மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மற்றும் பிற மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் வழங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.</u>**

இன்று (30.08.2023) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பிலும் மற்றும் பிற மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் வழங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சுமார் 1000 மில்லியன் லிட்டருக்கும் மேலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 85 இலட்சம் பொதுமக்களுக்கு மேலாக இதன்மூலம் பயனடைந்து வருகிறார்கள். மேலும், பிற மாவட்டங்களில் தனிக் குடிநீர் திட்டம் நீங்கலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 544 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் நாளொன்றுக்கு 2104 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், 12 மாநகராட்சிகள், 67 நகராட்சிகள், 344 பேரூராட்சிகள் மற்றும் 52,321 ஊரக குடியிருப்புகளில் உள்ள 4.53 கோடி மக்களுக்கும் மேல் பயன்பெற்று வருகிறார்கள்.

இனிவருங்காலங்களில், சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் பாதுகாப்பான குடிநீரினை சீரான முறையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அலுவலர்கள் தொய்வில்லாமல் மேற்கொள்ள வேண்டும். பருவமழை தொடங்குவதற்கு முன்னதாக

மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை சுத்தப்படுத்த வேண்டும். மேலும், இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடித்திட வேண்டும். பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னதாக உரிய கால இடைவெளியில், பொதுமக்களுக்கு, மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் குறித்த விவரங்களை தெரிவித்திட வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட புதிய குடிநீர் திட்டப் பணிகளின் மூலம் வழங்கப்பட வேண்டிய வீட்டு இணைப்புகள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வழங்கிட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவனத் தலைவர் / அரசு முதன்மைச் செயலாளர் மரு.எஸ்.விஜயகுமார், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், திரு.வி.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர், திரு.கிரன் குராலா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.சிவராசு, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை, நீர்வளத் துறை அலுவலர்கள், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்